போர்வாள்

இரட்டைத் தலை!



பீகார் மாகாணத்தில் மான்பூம் வட்டத்தில் நடைபெறும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அன்புடன் கவனித்து ஆவன புரிவதாகப் புன்னகை பூத்த முகத்துடன் கூறும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, சென்னை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றி அலட்சிய மனப்போக்கையே காட்டி வருகிறது; பீகார் வடநாட்டில் இருக்கிறது! சென்னை தென்னாட்டில் இருக்கிறது! -டு கட்டாமலா இருக்கும் காங்கிரஸ்?

வேறுபா

வாள் 2
வீச்சு 34

ஆசிரியர்கள்:
காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A. HONS.

அ 1/2 ண

Best copy available

சென்ற இதழ் தொடர்ச்சி:

காந்தியார் இருந்தால்......!

கண்ணீர் சிந்துவார்!

[முன்பு: சபர்மதி ஆஸ்ரமத்தில் காந்தியார் இருக்கும் போது தென்னாட்டிலிருந்து காங்கிரஸ் தொண்டர் ஒருவர் அவரைக்காண வருகிறார். தொண்டர், தன் வேலையை உதறித் தள்ளிவிட்டு, காங்கிரஸ் பணியில் ஈடுபட்டு, அதன் காரணமாகத் தன் சொத்தெல்லாம் இழந்து விட்டவர். ஆனால் ஜில்லா காங்கிரஸ் செயலாளராக இருந்தபோது அவரிடம் ஒப்படைக்கப்பட்ட நிதியை கணக்கு வைக்காமல் செலவழித்திருக்கிறார். ஆனால் அந்தப் பணத்தில் ஒரு பைசாவும் அவர் தன் சொந்தத்திற்கு செலவழிக்கவில்லை. என்றாலும் காங்கிரஸ் கமிட்டி, கணக்கில் வராத தொகை முழுவதையும் அவர் தன் கையைவிட்டுத் தரத்தான் வேண்டும் என்று கூறி விட்டது. காந்தியாரிடம் சென்று நல்ல தீர்ப்புக் கோருகிறார் தொண்டர். ஆனால் காந்தியாரும் கமிட்டி பணம் கேட்பது நியாயந்தான் என்று கூறிவிட்டார். தொண்டர் இடிவிழுந்தநாகமானார். பக்கத்தில் இருந்த ஆண்ட்ரூஸ், காந்தியாரைப் பார்த்து "உண்மைத் தொண்டரிடம் இப்படி நடந்து கொள்வது முறையா, தன் பணம் முழுவதையும்தான் அவர்காங்கிரஸ் பணிக்கே செலவிட்டு விட்டாரே, இப்போது, கமிட்டிக்கு எப்படிப் பணம் தருவார்?" என்று கேட்டார்.]

"ஆம்! அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். சொல்லால் அல்ல செயலால் மன்னிப்புக் கேட்க வேண்டும் அவர்! அவர் படித்தவர், ஆசிரியர், பிறருக்கு வழிகாட்ட வேண்டியவர், காங்கிரஸ்காரர். அவர் இப்படி நடந்து கொள்ளலாமா? கணக்கு வையாதது அவர் குற்றம். கணக்கைக் கொடு அல்லது பணத்தைக் கொடு என்று கமிட்டி கேட்பது முற்றிலும் நியாயம். அவர் நேரே ஊருக்குப் போகவேண்டும். சொந்த சொத்தை விற்றோ எப்படியோ ஆயிரம் ரூபாயைக் கமிட்டிக்குக் கொடுத்துவிடவேண்டும். அதன் பிறகுதான் நான் ஏதாவது உதவி புரிய முடியுமே தவிர அதற்கு முன்பு அல்ல! இது முடிந்த முடிவு."

காந்தியார் அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்டார். ஆண்ட்ரூசால் அதற்குமேல் பேசமுடியவில்லை. ஆண்ட்ரூசின் உள்ளம், அதன் பின்னரும் தொண்டரின் பக்கம்தான்! ஆனால் வாதம்! அதில் காந்தி வென்றுவிட்டார்!

தொண்டரோ, மனம் உடைந்து போய் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட நிற்கிறார். "நிற்பதில் பயனில்லை. நேரே ஊருக்குப் போங்கள். நான் சொன்னவண்ணம் செய்யுங்கள். நல்லது, போய் வாருங்கள்"—காந்தியார் கூறுகிறார். தொண்டரோ போக மனமின்றி அழுதவண்ணம் இருக்கிறார். எங்கே போவது? போய் என்ன செய்வது? பணம் ஏது அவரிடம்? எப்படிக் கொடுக்க முடியும்? கொடுக்கத்தான் வேண்டும் என்று பாபுஜியே கூறுகிறாரே நியாயமா? தொண்டர் ஏதேதோ எண்ணுகிறார். மனம் குழம்பிப்போய் நிற்கிறார். காந்தியார் முகமோ சிலைபோல அசைவற்று இருக்கிறது. தொண்டர் போய்த்தான் ஆகவேண்டும் என்றநிலை ஏற்பட்டு விட்டது. கடைசியில் ஒரு சங்கடம். திரும்பிப் போகப் பணமில்லை தொண்டரிடம். "இதையாவது கொடுத்துதவ வேண்டும்! நாம் செய்யக்கூடிய சிறு உதவி இதுதான்" என்கிறார் ஆண்ட்ரூஸ். காந்தியார் அதுவும் நியாயமல்ல, கொடுக்கக் கூடாது என்று மறுக்கிறார். "நம்மிடம் பணம் ஏது? நாம் ஓட்டாண்டிகள் அல்லவா? சொந்தப் பணம் சல்லி உண்டா நம்மிடத்தில்? பொதுப் பணம் தானே இருக்கிறது! அதிலிருந்து இவருக்குப் பணம் தருவோமானால் பணத்தைக் கையாடிய குற்றம் நம்மைச் சேராதா?"—இது, காந்தியாரின் வாதம்.

இரவு உணவு மட்டும் தர ஒப்புகிறார் காந்தியார். தொண்டர் மனம் இடிந்தவராய் காலையில் எழுந்து விடைபெற்றுக்கொண்டு போய் விடுகிறார். சபர்மதி ரயிலடிவரை சென்று, தொண்டரை வழியனுப்பிவிட்டு விடுகிறார் ஆண்ட்ரூஸ். "பாபுஜி! இப்போது தங்களிடம் நான் ஒரு பாவமன்னிப்பைப் பெறவேண்டியிருக்கிறது"-ஆண்ட்ரூஸ் சிரித்துக்கொண்டே கூறினார். "தெரியுமே எனக்கு உம் சங்கதி! அந்த தொண்டருக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்திருப்பீர் யாராவது நண்பர்களிடமிருந்து சிறு தொகை கடன் பெற்று! அதுதானே நீர் செய்த பாவம்!"—காந்தியாரின் இக் குறும்பான பதில் அவருடைய மோகனப் புன்னகையுடன் கலந்து வந்தது......

* * *

சொந்தத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை, தவறான முறையில் செலவிடவில்லை, ஒரு பைசாவும் வீண் செலவு செய்யப்படவில்லை, பொதுநலத்திற்கே முழுத் தொகையும் செலவிடப்பட்டிருக்கிறது! என்றாலும் கணக்கு இல்லை என்ற ஒரேகாரணத்திற்காக முழுத் தொகையையும், தொண்டர், தன் சொந்த சொத்திலிருந்தாவது தருவதுதான் முறை என்று கூறிவிட்டார் காந்தியார். பொது வாழ்க்கையும் பொதுப் பணியும் பொதுப் பணமும் அவ்வளவு புனிதமானது. காங்கிரஸ் பணியில் ஈடுபட்ட காரணத்தால், தொண்டரின் தொழில் கெட்டது, வாழ்க்கை பாழாயிற்று, வறுமை அவரைத் தேடிவந்து அடைந்தது, தியாகத் தீயில் வாட்டி வதைக்கப் பட்டார் நண்பர், என்றாலும் ஓர் ஆயிரம் அவர் தன் கைப் பணத்திலிருந்து தந்துதான்

பொத்தனூரில்.....!

பொத்தனூர்
(வேலூர்—சேலம்)

23—4—49 சனி மாலை திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் போர்வாள் ஆசிரியர் ம. இளஞ்செழியன் B. A. Hons சொற்பொழி வாற்றுவார்.

ஆகவேண்டும் என்று கூறிவிட்டார் காந்தியார்—கணக்கு வைக்காத ஒரே குற்றத்திற்காக!

ஆனால், இன்று, லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டு, காங்கிரஸ் மந்திரிகள் மீதே காங்கிரஸ் ஏடுகளாலேயே தாராளமாக வீசப்படுகிறது. காங்கிரஸ் எம். எல். ஏ. க்களோ பெர்மிட்டுக்காகவும் லைசென்சுக்காகவும் அலைவதும் திரிவதும் அதன் மூலம் பத்தாயிரமும் பதினைந்தாயிரமும் சம்பாதிப்பதும் ஊர் அறிந்த இரகசியங்கள்! காங்கிரஸ் எம் எல். ஏ.க்கள் பதவி ஏற்ற தினத்தன்று அவர்கட்கு இருந்த சொத்தையும் இன்று உள்ள சொத்தின் மதிப்பையும் கணக்குப் போட்டுப் பார்த்தால், இப்போது ஏராளமாக அதிக சொத்து ஏற்பட்டிருப்பதை தாராளமாக எவரும் உணர முடியும். எப்படி வந்தது இவ்வளவு சொத்தும்? காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி, தலைவரான புதிதிர் சென்னையில் பேசுகையில் குறிப்பிட்டார், "காங்கிரஸ்காரர்களும் இதுதான் சமயம் என்று தங்கள் தியாகத்தை விலைபேச ஆரம்பித்து விட்டனர். இலஞ்சம், ஊழல், சுரண்டல் காங்கிரஸ்காரர்களிடம் வர வர அதிகமாகிவிட்டது. இந்நிலை நீடிக்குமானால் காங்கிரசே அழிந்துவிடும் என்பதை எண்ணிப் பார்க்க அஞ்சுகிறேன்." ஆம்! அதுதான் பதில்! கணக்குக் காட்டாத சாதாரண குற்றத்தையே மன்னிக்க மறுத்த உத்தமர் காந்தியார் இன்று இருந்தால், காங்கிரஸ்காரர்களின் இந்த வெளிப்படையான ஒழுங்கீன நடத்தையைக் கண்டு கண்ணீர் சிந்தாமல் இருப்பாரா? ——

ஏன்? எப்படி? எதற்காக?

அடுத்த இதழிலிருந்து போர்வாளில் இப்புதிய பகுதி ஆரம்பமாகிறது. நீங்கள் திராவிடர் கழகத்தின் இலட்சியம் கொள்கை போக்கு முதலியவற்றைப் பற்றி எத்தகைய ஐய வினாவையும் கேட்கலாம். அந்தக் கேள்விகள் அத்தனைக்கும் இந்தப் பகுதியில் இனி உடனுக்குடன் விடை கிடைக்கும். முதல் இதழில் கேட்கப்படும் கேள்விகள் உங்களுடையதாக இருக்கட்டும், எதோ கேளுங்கள் பார்க்கலாம்,

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ந்தது அவர் தொல்லை என்று கூறுவதற்கு! இல்லையே! பெரியார், குமாரசாமிராஜா அல்லவே அவர் இருப்பது வெறும் சர்க்கார் மாளிகையில் மட்டும் அல்லவே.! பெரியார், ஒவ்வொரு ஊரிலேயும் இருக்கிறார். ஒவ்வொரு பட்டிதொட்டியிலும் இருக்கிறார் ஒவ்வொரு நாடு நகரிலும் இருக்கிறார், ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் இருக்கிறார், தேசியவாதிகள் பலர் நெஞ்சிலும் இருக்கிறார், காங்கிரஸ் எம். எல். ஏ. கள் பலர் உள்ளத்திலும் அவர்கட்குத் தெரியாமலே இருக்கிறார், சில மந்திரிகளின் மனதிலே கூட இருக்கிறார், தமிழகம் எங்கணும் இருக்கிறார், தமிழ்நாடே அவராக இருக்கிறார், அவரே தமிழ்நாடாக இருக்கிறது, இந்நிலையில், எந்த சர்க்கார்தான், பெரியாரை எப்படித்தான் கைது செய்ய முடியும்?

பெரியாரின் உடல்! அதைச் சிறையில் வைக்கமுடியும் சர்க்காரால்! நிச்சயமாக முடியும்! ஆனால் பெரியார்! அவரைச் சிறையில் வைக்க முடியாது. அவர் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலேயும் குடிகொண்டிருக்கிறார். குடி கொண்டிருக்கிறாரா, இல்லை, ஒவ்வொரு தமிழனின் உள்ளத்தோடு உள்ளமாக இரண்டறக் கலந்து விட்டிருக்கிறார். அவரையா சிறையில் வைக்க முடியும்? அவரைச் சிறையிலா வைக்கமுடியும்? நடவாத காரியம்! சர்க்காரால் முடியாத செயல்!

அந்த முடியாத காரியத்தைத் தான் செய்யப் போகிறேன் என்று துணிந்து முன்வந்திருக்கிறார் புது முதலமைச்சர் தோழர் குமாரசாமியார்! செய்யட்டும் செய்யட்டும், முடியுமானால்! தோற்று, தரைமண்ணில், கவிழ்ந்து, வீழட்டும் வீழட்டும், இல்லையானால்!

அடுத்த வாரத்திலிருந்து

★

இளவரசி

★

இராதாமணாளன் தீட்டிய எழிலும் சுவையும் ததும்பும் இனிய தொடர்கதையை போர்வாள் உங்கட்குக் கொண்டுவரும்.

பிறகு போர்வாள் கிடைக்கவில்லையே என்று வருந்தாதீர்கள். இப்போதே உங்களூர் ஏஜண்டிடம் உங்கள் பெயரைப் பதிந்துகொள்ளுங்கள்.

புரோகிதர் ஆட்சி

★

பாசறையின் புது வெளியீடு

பன்னெடுங்காலமாக புரோகிதர்களின் கொடுமை எப்படி மக்கள் முன்னேற்றத்தைத் தடுத்துவந்திருக்கிறது என்பதை வரலாற்றுரீதியாக விளக்கும் அரிய புத்தகம்.

விலை அணா 8 தபாலில் அணா 9.

வணிகர்க்குத் தக்க கழிவு உண்டு.

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

ஓயாத ஊடல்!

நாடகந்தான், ஆனால் நாட்டு நிலையுங்கூட!

"சம்மட்டியார்"

பிரதம நடிகர்

சுகுமாரன் [இந்திய சர்க்கார்]

நடிகைகள்.

வேலம்மாள் [இந்திய தொழிலாளி]
சுந்தரி [முதலாளி வர்க்கம்]
சுகுணா [சமதர்மம்]

காட்சி 1.

காலம்: காலை எட்டு மணி.

இடம்: வீட்டின் முன் வராந்தா.

நிகழ்ச்சி: வேலம்மாள் தூணில் சாய்ந்துகொண்டு நெற்றியைக் கைகளால் பிடித்தவண்ணம் சோர்ந்து உட்கார்ந்திருக்கிறாள். சுகுமாரன் வருகிறான்.

சுகுமாரன்: ஏம்மா, இதென்னம்மா, எப்பப் பார்த்தாலும் ஒன்னோடே இதே தொல்லையாப் போச்சு? போய் வேலையைப் பாரேம்மா. காலையிலே கைகட்டிகிட்டு உட்கார்ந்துட்டே மணி எட்டுக்கு மேலே ஆய்ப்போச்சு இன்னும் அடுப்புகூட பத்தவைக்கலே. நீ செய்யறது நல்லால்லே. போ, போ சீக்கிரம், ஏதாவது காலம்பற சுட்டுக்கொண்டா.

வேலம்மாள். வந்துட்டியாடாப்பா, என்னை வெரட்ட! நான் அஞ்சு மணிக்கே எழுந்திருச்சு, சாணி தெளிச்சு, கோலம்போட்டு, ஆட்டைக் கழுவி, பாத்திரமெல்லாம் விளக்கி, மாட்டுக்கொட்டிலைச் சுத்தம் பண்ணி, மாட்டைக் கறந்து, தீவனம்போட்டு, அப்பாடி இவ்வளவு வேலைகளைப் பாத்திருக்கேன். அங்கே போய்ப் பார்ரா, ஒன் ஆசை நாயகியே, ஏழேமுக்காலுக்கு எழுந்திருச்சா. மொகத்தைக் கழுவி, பவுடர் பூசி, தலையை ஒழுங்குபடுத்திகிட்டு இப்போ உதட்டுக்குச் சாயம் பூசிகிட்டு இருக்கா. அது ஒன் கண்ணிலே படுவாளா. என்னமோ என் தலைவிதி! (தலையிலடித்துக் கொள்ளுகிறாள்)

சுகு: இந்தாம்மா, எத்தனையோ தரம் ஒனக்குச் சொல்லிப்புட்டேன். அவ பேச்சை எடுக்காதே என்று. இந்தா இப்பவுஞ் சொல்றேன் கடைசி தரமா. இன்னமே அவளைப்பத்தி எங்கிட்ட புகார் பண்ணினே, எனக்குக் கெட்ட கோவம் வரும், ஆமாம். நீ பாட்டுக்கு ஒன் வேலையைப் பார்ப்பியா, மத்தவங்களே நீ யேன் கவலிக்கிறே? நீ செய்யறது யாருக்கு; எல்லாம் ஒன் வீடு! நான் யாரு, ஒன் மவன். நாம் எல்லாம் ஒரே குடும்பம். ஒன் வீட்டுக்கு வேலை செய்யறது, கேவலமா என்ன?

வேல: ஆமாமாம், என் வீடுன்னு இப்பொ ரொம்பப்பேர் சொல்வாங்க. வெளுப்பஞ்செட்டிகிட்ட (வெள்ளையனிடம்) வீடு அடமானம் இருந்தப்போ நான் பட்டபாடு, கொஞ்சமா? சரியா வட்டி கட்றதுக்கு வகையில்லேன்னு தெரிஞ்சுகிட்டு எங்கிட்ட மாளாத வேலை வாங்கினான் படுபாவி! சரி, எந்தப் பாடு பட்டாவது வீட்டைமீட்டுகிட்டாத்தான் நம்ம குடித்தனம் சீர்படுமுன்னு நெனச்சேன். நீயும் பொறந்தே. ஒன்னை வளர்க்க கொஞ்ச தொல்லையா அனுபவிச்சேன். சுள்ளி பொறுக்கி, சாணி தட்டி வித்து ஓரணாரெண்டணா மிச்சம் பண்ணி ஒனக்குப் பலகாரம் வாங்கிக் குடுத்துகிட்டு, இப்படியெல்லாம் கஷ்டப்பட்டேன். வெளுப்பஞ்செட்டி சும்மா இருந்தானா. நீ நல்லா இருக்கிறது அவனுக்குப் பிடிக்கல்லே. நீ பெரியவனானக்கா, அவன் பொய்ப் பத்திரம் எழுதி வைச்சுகிட்டு, இந்த வீட்டுக்கு உரிமை கொண்டாடறதை அம்பலப்படுத்தி வீட்டை மீட்டுக்கப் பாப்பேங்கிறது அவனுக்குப் பயம். போககிரிப்பய, அவனுக்கு ஒண்ணும் குடுக்காதே, அவன் என் முகத்திலேயே முழிக்கக்கூடாது அப்படின்னு விரட்டுவான். அப்படி இருந்தும் ஒன்னை எப்படியாவது முன்னுக்குக் கொண்டுவந்து நம்ம கஷ்டகாலத்துக்கு முடிவு கட்டணுமின்னு ஒன்னை வாலிபமாக்கிவிட்டேன்...

சுகு: அதேம்மா, சும்மா, பழைய கதையைச் சொல்லிகிட்டு இருக்கிறே. எல்லாந்தான் பண்ணுனே. இப்ப என்னா கொறவு வந்துடுச்சு ஒனக்கு?

வேல: கொறவு என்னவா? இன்னம் என்னா இருக்குது பாக்கி, வர்ரதுக்கு. மாடா ஒழைக்கிறேன். ஒழைக்கிறதைப்பத்தியில்லே, இந்தப் பாழும் வயித்துக்குத் திருப்தியா சோறுண்டா. இந்த அங்கத்தை மூட நல்ல துணி உண்டா? நீயென்னான்னா நல்ல கதர்ப்பட்டு அங்கவஸ்திரத்தை மடிப்புக் கலையாமே போட்டுகிட்டு, ஜம்முன்னு பன்னீர் வாடை வீச, விருந்துக்கும் களியாட்டத்துக்கும் பணத்தை வீசி 'என் மதிப்பு வெளியானுங்ககிட்ட ஒசறணும் ஒசறணும்'னு சுத்திகிட்டு வர்றே! ஏண்டாப்பா, இந்த கௌரவமும், அந்தஸ்தும் யாராலே வந்துச்சுங்கிறதை மறந்தா போயிட்டே? தாய் நானு, இங்கே சோத்துக்கு ஆலாப் பறக்கிறேன்.

சுகு: ஏம்மா, ஆலாப்பறக்கிறே நீதானே சமையல் பண்றே! அடுப்பங்கரை ஒன் வசம். நீ ஆக்கறதை நீ நல்லாப்போட்டுத் திங்கறது.

வேல: ஆமா, நான்தான் ஆக்கறேன். அவ குடுக்கிற அரிசி, புளி, மொளகாயை வச்சுகிட்டுப்பக்குவமா சமையல் பண்ணி முடிச்ச ஒடனே பங்கு பிரிக்க ராணியம்மா வந்துடுவா. எனக்குக் கிடைக்கிறதென்னமோ, கஞ்சித் தண்ணியும் கொஞ்சம் கொளம்பும்தான். அவ சட்ட வட்டமா கொறச்சலில்லாமே கொட்டிக்கிறா. 'ஸ்டோர் ரூம்' அவகிட்ட. அவதான் பூட்டி வச்சுகிட்டுக் கணக்கா குடுக்கிறா. அதை ஒன் வசத்திலே வச்சுகிட்டு நிர்வாகத்தை நீ பாத்தாத்தாம்பா எனக்கு வயிறாரவாவது சோறு கிடைக்கும். பெத்து வளத்தவளுக்கு வஞ்சனை பண்ணலாமா, சுகுமாரா? அவ நேத்து வந்தவள். நான் அரும்பாடுபட்டு ஒன்னை வாலிபமாக்கிவிட்ட ஒடனே, வெளுப்பஞ்செட்டி கிட்டேருந்து வீடு ஒனக்கு மாறப்போவதுன்னு தெரிஞ்சதுமே, மெதுவா ஒங்கிட்ட ஒட்டிகிட்டாளே கள்ளி! செட்டி இருக்கிற வரைக்கும் அவனை குலுக்கி மயக்கிகிட்டு; அவனோடே சேர்ந்துகிட்டு ஒன்னைத் திட்டிக்

இட்டு இருந்தா. அவன் இதைவிட்டு போறதன்னு முடிவு கட்டுனதும் ஒன் பக்கம் வலையை வீசிஞ, நீயும் மயங்கிட்ட. ஒன்னை நம்பினதுக்கு எனக்குக் கிடைச்சது வசவும் குத்தும், ஓயாத உழைப்புந்தான்.

சுகு: அம்மா, இன்னம் பத்து வருஷத்துக்கு 'ஸ்டோர் ரூமை'யோ வீட்டு நிர்வாகத்தையோ என் வசம் கொண்டார முடியாது! என்னை என்ன பண்ணச் சொல்றே? அவ பணக்காரி. தர்பார் பண்றா. 'ஸ்டோர் ரூமை' எங்கிட்ட ஒப்பிச்சிடுன்ன, அதிலே வருஷக் கணக்குச்குப் புளி மிளகா மத்த சாமானெல்லாம் வாங்கி வச்சிருக்கேன், ரூபா 300 ஏக் கீழே வச்சிட்டு வேணுமானா சாவி வாங்கிக்கோ, அப்படிம்பா. நானெங்கே போறது இப்ப பணத்துக்கு? முதல்லேயே 'பாப்பரா' இருக்கேன். மேலும் குடும்ப நிர்வாகம் பாத்து எனக்குப் பழக்கமில்லே. பல்லைக் கடிச்சுகிட்டு ஒரு பத்து வருஷம் பொறுத்துகிட்டு வேலையைக் கவனிம்மா. அப்புறம் நீ வச்சது தான் சட்டம் இந்த வீட்லே, அப்படிப் பண்ணிப் புடறேன்.

வே: பத்து வருஷமா, அட பகவானே, அதுவரைக்கும் இந்த ஒடம்பிலே உசிரை வச்சிருப்பியா! ஒனக்கு கண்ணிருந்தா பாரு, பாரு, நடக்கிறதையெல்லாம்!

(வேதனையுடன் எழுந்து செல்கிறாள்)

காட்சி 2.

நேரம்: காலை 11 மணி

இடம்: சுந்தரியின் அலங்கரிப்பு அறை.

நிகழ்ச்சி: சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு போட்டிப் பந்தய விவரங்களைப் பாத்துக் கொண்டிருக்கிறாள். பக்கத்திலுள்ள ஸ்டூலில் தேனீர்க் கோப்பை இருக்கிறது. அதை எடுத்து ஒரு மிடறு குடிப்பதும் பிறகு படிப்பதும், பின் குடிப்பதுமாக இருக்கிறாள். வெளியே அறைக்கதவு தட்டப்படும் ஓசை கேட்கிறது.

சுந்: சை, நான்சென்ஸ், பெரிய 'ஒர்ரி'யாப் போச்சு! 'பூல்ஸ்' நேரங் காலந் தெரியறதில்லை. ஒரு வேலை செய்யவிட மாட்டேனென்கிறதுகள். (அதிகாரத் தொனியுடன்) யாரது?

சுகுமாரன்: (குழைவாக) ஏன் சுந்தரி, நான் தான், கதவைத் திறவேன். ஒரு முக்கியமான சேதி பேசனும் ஒன்னோடே.

சுந்: (கதவைத் திறந்து பார்த்து முகத்தைச் சுளித்துத் திருப்பிக் கொண்டு) நீர் தானா, என்ன முக்கியமான சேதியோ? ஓம்ம அருமைத் தாயாரைப் பத்தினது தான் 'பேச வருவீர். வைக்கிற ஒப்பாரியை சுருக்கமா ஒரு மூச்சு அழுதுட்டுப்போம். எனக்குப் பெரிய வேலை யெல்லாங் கிடக்கு.

சுந்: ஏஞ் சுந்தரி இப்படிக் 'கடுகடு'ன்று பேசறே. தாயார்னா ஏன் அப்படி வேம்பா இருக்கு ஒனக்கு. அவதான் என்னை ஆளாக்கி விட்டவடி.

சுந்: ஆமாம், நான் கடைசிக் காலத்திலே பணஒத்தாசை பண்ணியிருக்கலேன்னா செட்டியை விரட்டியிருப்பீங்க, இப்ப ரொம்ப கொளிச்சிகிட்டும் இருப்பீங்கல்ல, ஆயியும் மகனும்!

சுகு: அது சரிதாண்டி, அவளும் மனிதப் பிறவியில்லியா. இரக்கங் காட்ட வேணாமா...........

சுந்: அவளுக்கா இரக்கம்? என்ன கேடு இப்போ அவளுக்கு? பிச்சைக்காரக் கழுதே, வேலையும் சரியாய்ப் பார்க்கிறதில்லே. நான், வேறே 'ட்ரெஸ்' பண்ணிக்கிட்டு, வெளியே போய்ட்டுத் திரும்பி வந்து பாத்தா, நான் முதல்லே கழட்டிப் போட்ட ஆடையெல்லாம் அப்படியே தரையில் கிடக்குது. அதைல்லாம் எடுத்து ஒழுங்கா மடிச்சு வைக்கிறதைவிட வேறென்ன செஞ்சிகிழிக்கிறாளாம்! இந்த லட்சணத்திலே போடற சோறு சித்த போதலையாம். அதுக்கு ஐயாவும் வக்காலத்து வாங்கிட்டு வந்துட்டார்!

சுகு: கோவிச்சுக் காதடி, கண்ணு. அப்படியா செஞ்சா? நான் அவளைக் கண்டிக்கிறேன். நீ மட்டும் கொஞ்சம் அவளுக்குக் கஞ்சி கூட......

சுந்: அதெல்லாம் எனக்குத் தெரியும். அது சரி, என்னமோ பத்து வருஷத்திலே வூட்டுப் பொறுப்பை எடுக்கப் போறேன்னு சொல்லிக் கிட்டிருந்தீராமே! எல்லாம் ஒழுங்கு பண்ணிவச்சா, ஐயா, அல்வா மாதிரி அலங்காமே கைப்பத்திக்கிலாமுன்னு எண்ணமோ! ரொம்ப நல்லாருக்கு யோசனை! போனாப் போவுது, தினம் இன்னம் ரெண்டு கறி கூடப் போடச் சொல்லலாமுன்னு நினைச்சேன். சரி, சரி, இன்னமே எனக்கென்ன அக்கரை? பழையமாதிரி கஞ்சி, மோளகாத் தொவையலோட வுட்டுப் புடறேன். ஊஹூம், அவ்வளவுக்கு ஆயிப்போயிடுச்சா? அதுக்கு இங்கே இளிச்சவாய் யாருமில்லே தெரிஞ்சுக்கும்!

சுகு: இன்னம் பத்து வருஷம் கழிச்சுச் செய்யறதுக்கு இப்பவே ஏண்டி இப்படிக் குதிக்கிறே. என்னமோ, அம்மாவுக்கு மனசு திருப்திபடட்டுமின்னு சொல்லி வச்சேன். அதை நிஜமின்னு நினைச்சுட்டே. அட பைத்தியமே, ஒன் கூத்தை எங்கே போய்ச் சொல்வது ஹ.. ஹ...ஹ (அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறான்). நீ அவளுக்கு ஒன்னு ரெண்டு கறி கூடப் போடுடி! அவளும் நல்லா இருந்தாத் தானே, நிறையவேலையும் செய்வா, நமக்கும் நல்லது. நான் சொல்றதைக் கேளு என் தங்கமல்ல (அவளது மோவாய்க் கட்டைப் பிடிக்கிறான்)

சுந்: (அவன் கையைத் தட்டிவிட்டு) போதும் போதும் போய்ட்டு வாரும். ஓம்ம சமாசாரத்தைப் புரிஞ்சுகிட்டேன். இன்னமே எனக்கு ஒண்ணும் சொல்லத் தேவையில்லை. நடையைக் கட்டும்! எனக்கு வேலை இருக்கு.

சகு: (தனக்குள்) அட கண்றாவியே, ரெண்டு பக்கமும் இந்த மாதிரி அல்லவா ஒன்னுக்கொன்னு கீரியும்பாம்புமா இருக்கு! சரி, நமக்கென்ன.........இவளைப் பகைத்துக் கொள்ளக்கூடாது. இல்லாட்டி வெளியானெல்லாம் நம்மை மதிப்பா நெனச்சுகிட்டிருக்கிறான்களே, நம்ம ஆடம்பரத்தைப்பாத்து, அந்த சுகவாழ்வுக்கும் ஆபத்து வந்துடும். அப்புறம் நாலு பேர் நம்மை நாலு காசுக்கு மதிப்பானா?

(போகிறான்)

காட்சி 3.

நேரம்: காலை ஏழுமணி

இடம்: முன்வாசலில் ஒரு கிழிந்த பாயில் வேலம்மாள் படுத்திருக்கிறாள், குளிரில் நடுங்கிக் கொண்டு

நிகழ்ச்சி: சுகுமாரன் எழுந்திருந்து கண்ணைத் தேய்த்துக் கொண்டு வெளியே வருகிறான், அறையை விட்டு.

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 சித்திரை 11
23—4—49 சனிக்கிழமை

நொறுங்கிப்போன ஆயுதத்தை எடுத்துவீசுகிறார் குமாரசாமியார்!

ஆம்! புதிய பிரதமர் குமாரசாமியார், பழைய பிரதமர் ரெட்டியாரால் ஆணவத்துடன் ஏந்தப்பட்டு, அதிகார போதையில் ஆழ்ந்திருந்த காரணத்தால் திராவிடர் கழகம் என்னும் பாட்டாளிகளின் பட்டாளத்தின்மீது வீசப்பட்டு, பொது ஜன எதிர்ப்புச் சக்தி என்னும் சம்மட்டியால் தூள் தூளாக உடைத்தெறியப்பட்ட அந்தப் பழைய ஆயுதத்தின் உடைந்த துண்டுகளையும் துணுக்குகளையும்தான் மீண்டும் எடுத்து வீச ஆரம்பித்திருக்கிறார் திராவிடர் கழகத்தின்மீது!

எந்த ஆயுதத்தை கழகத்தின் மீது வீசிப் பார்த்து, கழகத்தை வீழ்த்துவதற்குப் பதிலாக அந்த முயற்சியில் ஈடுபட்டன்று அந்த ஆயுதமே முறிந்து வீழக் கண்டாரோ அன்பர் ரெட்டியார், அதே ஆயுதத்தைத்தான் அதே கழகத்தின் மீது, அறியாமை காரணமாக இன்று அவசர அவசரமாக, ஆளவந்தாராக ஆன நாலாறு பத்து நாட்களுக்குள் எடுத்து வீசுகிறார் குமாரசாமியார்!

"திராவிடர் கழகம் வேகமாக வளர்கிறது—உண்மை, நாடெங்கும் உல்லாசமாகப் பவனி வருகிறது—புரட்சி தன் அரசாட்சியை எங்கெங்கும் தொடங்கிவிட்டது — சீர்திருத்தம் பட்டிதொட்டியில் எல்லாம் கூடப் புன்னகை புரியத் தொடங்கி விட்டது—இது ஏதடா தொல்லை! வளர்கிறதே இதன் எல்லை! எடுத்து வீசுவோம் இதன்மீது கவண்கல்லை! பிடுங்கி எறிவோம் இதன் நச்சுப்பல்லை" என்று கூவினார் ரெட்டியார், கொக்கரித்தார், விட்டேனுபார் இந்த வீணர்களை என்று ஆர்ப்பரித்தார், அடக்கியே தீருவேன் இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை என்று 'ஆணவமொழி' புகன்றார், ஒழித்துக்கட்டுவேன் இந்த ஈரோட்டுப் பாசறையினரை என்று எக்காளமிட்டார், ஆம் ஆம் இதுகளை ஒழிக்கும் வழி இதுகள்மீது 144 உத்தரவை வீசுவதுதான்—வீசினால் போதும்- இவர்கள் பிரசாரம் ஒடுங்கி விடும்; என்று பொய்க்கனவுங் கண்டார், அக் கனவு பலிக்கும் என்றும் நம்பினார், வீசினார் 144-ஐ! ஆனால் அவர் வீசிய 144, பத்தே நாட்களில் குடந்தை நகரில் முறிந்து வீழ்ந்தது—ஜனநாயகம் தலைநிமிர்ந்து நின்றது. இன்று, குமாரசாமியார், அன்று, ரெட்டியார் புரிந்த அதே வீண் காரியத்தைத்தான் புரிகிறார். எனவே இவரும் ரெட்டியாரைப்போலவே, ஒரு சில நாட்களுக்குள், தோல்வி மாதினைத் தழுவிய வண்ணம் தோற்றேன் தோற்றேன் என்று கண்ணீர் சிந்திக் கதறி அழுவது நிச்சயம்.

ஓமந்தூரார் குடந்தையில் 144ஐ வீசினார் என்ற செய்தி வந்து பாய்ந்தது தமிழர் செவியில். உடனே துள்ளி எழுந்தது தமிழகம் அந்த 144ஐ முறித்து வீழ்த்த. தினம் தினம் தொண்டர்கள் பதின்மர் குடந்தை வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர், 144ஐ மீறினர், தமிழ் வாழ்க என்று ஒலித்தனர், உடனே ஒஹோ இவ்வளவு ஆணவமா உங்கட்கு என்ற கேட்டவண்ணம் சர்க்கார் அத்தொண்டர்களைத் தடியால் அடித்து நையப் புடைத்து ஊருக்கு வெளியே கானகத்தில் கிடத்தினர். தமிழர் குருதி கொட்டிற்று குடந்தை மண்ணில், குண்டாந் தடியடிபட்டு தமிழர்தம் எலும்புகள் முறிந்து வீழ்வதும் நரம்புகள் அறுந்து, சதைகள் துவண்டு, கைகால்கள் சிதைந்து, இரத்தம் ஆறென ஓடுவதும் நித்திய நிகழ்ச்சிகளாயின, என்றாலும் என்ன, இறுதியில் வெற்றி தமிழர் தோள்களை மேவிற்று, சர்க்கார் தோல்விச் சிந்து பாடினர், பாடியவண்ணம் மூலை தேடினர் முக்காடிட்டு அழுதிட! அந்த வரலாறு குமாரசாமியாருக்குத் தெரிந்துதான் இருக்கவேண்டும், இந்த நாட்டில்தானே இருந்தார் அவர், எப்படித் தெரியாமல் இருக்கமுடியும். தெரிந்தது தான் அந்த வரலாறு எனில்,

ஏன் இவர் அதே வழியில் செல்லத் தொடங்கியிருக்கிறார்—144ஐ இவரும் வீச ஆரம்பித்திருக்கிறார்? அதிகார மதுவைப் புதிதாக உண்ண ஆரம்பித்திருப்பதால் ஏற்பட்ட மயக்கமா அல்லது ரெட்டியார் தோற்றால் என்ன குமாரசாமியார் வெல்ல முடியும் என்ற எண்ணமா, பொதுஜன சக்தி என்ன அவ்வளவு பலமுடையதா ஒரு கை பார்த்துத்தான் விடுவோமே என்ற நினைப்பா, அல்லது நம்மிடம் போலீஸ் இருக்கிறது—பட்டாளம் இருக்கிறது—சிறைச்சாலை இருக்கிறது-சட்டசபை இருக்கிறது—குண்டாந்தடி இருக்கிறது, கோணல் சட்டங்கள் ஓராயிரம் இருக்கின்றன—என்ன செய்ய முடியும் இந்தப் பொதுஜன சக்தி என்ற ஆணவமா, எது காரணம் புதுப் பிரதமரின் இந்தக் கோணல் போக்குக்கு?

ஓமந்தூரார் உறுதி படைத்த உள்ளம் படைத்தவர். யாருக்கும் அஞ்சாதவர். எவர் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் சாய்ந்துகொடுக்க விரும்பாதவர். வணங்காமுடி மன்னர்! அத்தகைய வைர நெஞ்சு படைத்தவராலேயே திராவிடர் கழகத்தையும் அந்தக் கழகத்திற்கு இருக்கும் தளராத பொதுமக்கள் ஆதரவையும் ஒழிக்கமுடியவில்லையே 144 என்னும் ஆயுதத்தைக்கொண்டு, இவர்—குமாரசாமியார்—பலருக்கும் வளைந்து கொடுக்கும் பண்பும் பழக்கமும் உடையவர் — எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும் என்பதற்காக எவருக்கும் தாழ்ந்து செல்ல எண்ணுபவர், திடசித்தமோ உறுதியோ அற்றவர், இவரா, கழகத்தை ஒழித்துவிட முடியும்?

சென்ற வாரம், உடுமலைப் பேட்டையில் சொற்பொழிவாற்றச் சென்ற நம் தலைவர் **பெரியாருக்கும்,** உடன்சென்ற மாணவர் கழகத் தலைவர் மதியழகனுக்கும், உள்ளூர்த் தலைவர்கள் நாராயணனார், தங்கவேலர் ஆகியோருக்கும் 144ஐ அன்பளிப்பாக அளித்துள்ளனர் சர்க்கார்! பெரியாரும், பிறரும், அந்த உத்தரவை மீறி, அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசி இருக்கின்றனர், சர்க்கார் அவர்களைக் கைது செய்து, வழக்கும் பதிவு செய்திருக்கிறது, விரைவில் விசாரணை நடத்தப்பட்டு, பெரியாரும் பிறரும் தண்டிக்கப் படலாம்.

ஓமந்தூரார் காலத்திலாவது, குடந்தை நகரில் 144 உத்தரவு பத்து நாட்களுக்காவது தன் ஆணவ ஆட்சியை அமுல் செய்து வந்தது! ஆனால் குமாரசாமியார் காலத்திலோ, ஒரே நாளில், உடுமலைப்பேட்டையில் 144, முறிந்துபோயிற்று-தடை மீறப்பட்டு, பொதுக்கூட்டம் நடத்தப்பட்டு, பெரியார் சொற்பொழிவு நிகழ்த்தியும் இருக்கிறார். 144ஐ குமாரசாமியார் திராவிடர் கழகத்தின்மீது வீசினால், இதுபோல அது முறிந்து வீழ்ந்துவிடும் என்பது எதிர் பார்க்கப்பட்ட நிகழ்ச்சிதானே! ஓமந்தூரார் காலத்திலேயே நொறுங்கிப்போன ஆயுதம், குமாரசாமியார் காலத்திலா வெற்றிபுரிப் பயணம் செய்யப் போகிறது?

பெரியார் அவர்களையும் பிற தோழர்கள் மூவரையும் போலி விசாரணை நாடகம் ஒன்றை நடத்தி, அதன்பிறகு சர்க்கார், சிறைச்சாலைக்குள் தள்ளிவிட எண்ணமிட்டு விட்டார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. சிறையிலே செந்தமிழர் தலைவரை ஓர் ஆறுமாதம் வைத்திருப்பதாலே, தமிழர் எழுச்சி அடங்கிவிடாது. மாறாக அது மேலும் மேலும் வலுப்பெற்றெழுந்து ஓங்கி வளர்ந்து, புரட்சிப் புயலாக மாறி, இந்த சர்க்காரையே ஆட்சிப் பீடத்தை விட்டு விரட்டினாலும் வியப்பதற்கில்லை. அவ்வளவு பலம் பொருந்திய சக்தி, தமிழர் எழுச்சி!

தலைவர் சிறையில் என்றால், தமிழர் ஒவ்வொருவருமே ஒரு தலைவராகிவிடுவர். ஒரு பெரியாருக்குப் பதிலாக ஆயிரமாயிரம் பெரியார்கள் தோன்றிவிடுவர். சர்க்கார் இதை உணரட்டும். சர்க்காரால் ஒரு பெரியாரைச் சிறையில் அடைக்க முடியும், அவர்தம் குரல் ஒலி தமிழகத்தில் கொஞ்ச காலத்திற்குக் கேட்காமல் இருக்கும் படிச் செய்துவிட முடியும் ஆனால் பெரியாரைச் சூழ்ந்து நின்று கொண்டு அவர்தம் மொழியே தம் வாழ்க்கைக்கு வழி என்பதை நன்குணர்ந்த காரணத்தால் அவர் இடும் கட்டளையை உடனே எழுத்துக்கெழுத்து நிறைவேற்றி வைக்கக் காத்திருக்கும் இரண்டரைக் கோடி தமிழர்கள்!—அவர்கள் அனைவரையுமா சர்க்காரால் சிறையில் அடைத்துவிட முடியும்?

பெரியார் அவர்களைச் சிறையில் அடைப்பது என்பதே கூட, உண்மையாகப் பார்த்தால், நடக்க முடியாத காரியம்! பெரியார் என்றால் அவர் ஒரு தனி மனிதரல்ல. ஓர் இயக்கம்! ஓர் இயக்கம், என்றால் சிறந்ததோர் இலட்சியம் என்று பொருள். ஒரு இலட்சியத்தைச் சிறைவைப்ப தென்பது நடக்கிற காரியமா?

இந்த சர்க்கார் பெரியாரை எப்படிச் சிறையில் வைக்க முடியும்? பெரியார் என்ன குமாரசாமி ராஜாவா, ஒரு தனி மனிதர்—ஆகவே ஆளைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டால்

(3-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சுகு: (கண்களில் தீப்பொறி பறக்க), ஏம்மா, இன்னையிலிருந்து வேலே பார்க்க முடியாதுன்னு சொல்லிப்புட்டியாமே. அதான் சுகமா படுத்துகிட்டு இருக்குயா எட்டு மணி ஆயியுங்கூட! எங்கிருந்து திங்கிறது சும்மா குந்திகிட்டு.

வேல: (எழுந்து உட்கார்ந்து கொண்டு) டே அப்பா, ஒழுங்கா என் குறையைத் தீர்த்தின்னு, வேலேயைப் பாப்பேன். இல்லாட்டி அது வரைக்கும் இப்படித் தான் இருப்பேன். மூணும் வருஷம் ஆகஸ்டு 15-ந் தேதி ஒங்கையிலே வீடு வர்ர வரைக்கும் எங்கிட்ட என்னு சொன்னே, "அம்மா நான் ஒன் இஷ்டம்படியே சுகுவைக் கல்யாணம் பண்ணிக்கிறேன், இது சத்யம், சத்தியம்"னு, மூனு தரம் கை போட்டுக் கூடக் குடுத்தே. சுகுணு தங்கமான பொண்ணு, செட்டா ஆடம்பரமில்லாமே குடுத்தனம் பாப்பா, எனக்கு வஞ்சனே பண்ண மாட்டா அவளே நீ கட்டிகிடுவே சொன்ன மாதிரி, எங் கவலேயும் பறந்து போயிடும்னு நிச்சயமா நம்பினேன். இப்ப என்னடான்னு அந்தத் தளுக்கு சுந்தரியைக் கூட்டி வச்சுகிட்டியே, இது அடுக்குமா? டே இப்பவுஞ் சொல்றேன். அந்தத் தேவடியாளே ஒதுக்கி வச்சிடு, நாளேக்கே சுகுணவை ஒனக்குக் கல்யாணம் பண்ணி வச்சிடுறேன் குடித்தனமும் ஒழுங்கா வரும்.

சுகு: சீ, சும்மா கெட. அந்த மூதேவி சுகுணவைக் கல்யாணம் பண்ண வைக்கிறுங்களாம் இந்தம்மா! சுந்தரியின் கால் தூசிபொறுவாளா அவ? அவளோட அழகென்ன, பழகிற விதமென்ன, 'ஃபாஷன்', 'டீஸன்ஸி' எல்லாம் என்ன, அவளே விட்டுட்டு அந்தப் பட்டிக்காட்டு 'ப்ரூட்'டைக் கல்யாணம் பண்ணிக்கிறதாம்! சரி, சரி நீ புத்தி சொன்னது போதும், போய் வேலேயைப் பாரு! இல்லாட்டி...

வேல: அடே, என் ஒடம்பு ஈர்க் குச்சியாய் போச்சு. குனிஞ்சு நிமிர்ந்து அஞ்சு நிமிஷம சேர்ந்தாப்பலே வேலே செய்ஞ்சா 'கிறு கிறு'ன்னு தலே சுத்துது. வயிறு இருக்கிற எடமே தெரியலே. வயித்துக்கு போதுமான சோறு போடச் சொல்லு. நான் ஒழுங்கா வேலேயைப் பார்க்கிறேன்.

சுகு; அவ்வளவு திமிராப் போயிடுச்சா ஒனக்கு? (ஓடிச் சென்று மூலேயிலிருந்த தடிக் கம்பை எடுத்து வந்து சாத்துகிறுன் தாயை) நாலு நாளேக்கு ஓட்டல்லே சாப்பிட்டுகிட்டு ஒன்னேக் காயப் போட்டா, பேசாம வர்ரே வழிக்கு. (வேலம்மாளே இழுத்து வந்து ஒரு அறையில் போட்டுப் பூட்டுகிறுன்)

(அறையிலிருந்து மெல்லிய குரல் கேட்கிறது) ஐயோ, பாவி என் மண்டையைத் தொறந்திட்டானே! அடே ஒன்னேப் பெத்த வயித்திலே ஒரு குழவிக் கல்லேப் பெற்றிருக்கலாண்டா (வேதனே நிரம்பிய அழுகுரல் கேட்கிறது.)

காட்சி 4.

நேரம்: இரவு மணி 10

இடம்: படுக்கை யறை

நிகழ்ச்சி: சுந்தரி பஞ்சணே மீது படுத்துக் கொண்டு கால்கள் ஆட்டியவாறு ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிருள். அறை முழுதும் 'கம்' மென்ற வாசனே கமழ்கிறது. கட்டிலுக்குப் பக்கத்திலுள்ள ஒரு 'ஸ்டூலி'ல் வெள்ளிச் செம்பில் பால், தட்டில் சில ஆப்பிள்கள், வெற்றிலேத் தட்டு முதலியன வைக்கப்பட்டுள்ளன. சுகுமாரன் வருவதைக் கண்டதும் புத்தகத்தை அப்படியே மார்பின் மீது போட்டுக்கொண்டு, தூங்குவது போல் பாசாங்கு செய்கிருள். சுகுமாரன் அருகில் வந்து பஞ்சணேயில் வந்து கொஞ்சுகிறுன்.

சுகு: கண்ணே, என்ன அதற்குள் தூங்கி விட்டாயா? நான் தான் அடிக்கடி சொன்னேனே, அளவுக்கு மீறி 'டென்னிஸ்' ஆட வேண்டாமென்று. இன்று நல்ல ஜோடியோ? அது தான் கால் அசதியோடு பால் பழங்கூட உண்ணுமல் அயர்ந்து விட்டாய் போலிருக்கிறது! (கால்களேப் பிடித்துப் பிடித்துவிடுகிறுன். சுந்தரியோ கால்களே அவன் பிடியிலிருந்து அகற்றி மடக்கிக் கொள்கிருள்.)

சுகு: (அவள் கைகளேப் பற்றியவாறு) எழுந்திரு சுந்தரி, நான் —உன் ஆசைக்காதலன்—வந்திருக்கிறேன், ஏங்க வைக்கிறுயே (கைகளே வெடுக்கென்று உதறிக் கொண்டு அவனுக்கு முதுகைக் காட்டியவண்ணம் திரும்பிப் படுத்துக் கொள்கிருள்)

சுகு: விழித்துக் கொண்டு தானிருக்கிருயா? பின் ஏன் இந்தக் கோபம். நான் தான் அறியாமல் ஏதாவது பிழை செய்து விட்டேனு, புரிய வில்லேயே.

கண்ணே இப்படி மௌனமாயிருந்தால் நான் எப்படிப் புரிந்து கொள்வது? வாயைத் திறந்து சொல்லடி, நான் என்ன குற்றம் இழைத்தேனென்று. 'லிப் ஸ்டிக்' தீர்ந்து விட்டதா அல்லது வேலேக்காரன் மட்ட 'சென்ட்'டை வாங்கி வந்து விட்டானு, சொல்லடி சீக்கிரம், என் ஆவி துடிக்குதடி!

சுந்: ஊ ஹூம், ஒன்றுமே தெரியாத உத்தமர்! பாவம்! பத்து வருஷத்தில் என் பணத்தைப் பிடுங்கி 'பாப்பரா'க்கி விடுகிறேன் என்று பகர்ந்து விட்டு, பள்ளியறையில் பசப்புகிறீரோ பாவையிடம்?

சுகு: அடப் பைத்தியமே, இப்படியும் பெண் இருப்பாளா... அட...டா டா, இதற்கா இந்தப் பிணக்கு? சும்மா சொன்னேன்டி என் தாயைச் சரிப்படுத்த! விளேயாட்டாகச் சொன்னது வினேயாகி விட்டது போலிருக்கிறது!

சுந்: நிஜமாவா, அப்படின்னு கை போட்டுக் கொடுப்பீர்களா?

சுகு: என்ன சுந்தரி, என்னே இவ்விதம் சந்தேகப்படுகிருய், இவ்வளவு நாள் என்னேடு பழகியும்! வீட்டு நிர்வாகத்தை நான் நடத்த முடியுமோ முடிந்தாலும் அப்படி செய்வனு உனக்கு விரோதமா? இருந்தாலும் இந்தா கையைக் கொண்டா...சத்தியமா ஒன் விஷயங்கள்ளே நான் பிரவேசிக்கிறதில்லே, முந்தி சொன்னதையும் வாபஸ் வாங்கிக் கொண்டேன், போதுமா?

சுந்: அப்பாடி இப்பத்தான் என் மனசு குளிர்ந்துச்சு. கண்ணளா, தாங்கள் மிகவும் களேப்பாக இருக்கிறீர்கள். இந்த ஆப்பிள் துண்டுகளே நான் உங்கள் வாயில் ஒவ்வொன்ருக ஊட்டி விடுகிறேன். தின்றுவிட்டு பாலேயும் பருகுங்கள்.

சுகு: சுந்தரி, இருந்தாலும் நம்ம ரெண்டு பேத்துக்கு மத்தியிலே 'ஓயாத ஊடல்' இருகிரதாத் தான் காமிச்சுக் கோணும் அந்த மூதேவிக்கு. இல்லாட்டிக் கத்தி கிட்டே இருக்கும், ஆனு, ஒரு விஷயம்! அதை நெனச்சா எனக்கு வயிறு

(12-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை :

காவேரிக் கரையில்..!

ந. காசிராஜன்

கருப்பூர் கும்பகோணத்திற்கு தெற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ள சிற்றூர். காவிரிக் கரை ஓரம். இயற்கை எழில் ததும்பும் இடம், சிவப்பிரகாச முதலியார் தான் அவ்வூர் பெரிய மிராசுதாரர்! மிகுந்த செல்வாக்குடையவர். பட்டை நீறு அவர் நெற்றியில் எப்போதும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். வெறும் நெற்றியோடு அவரை வெளியில் காண்பதே அரிது. அவ்வளவு பக்திமான். தன் அருமை மகள் நீலாவின் புன்னகை தவழும் முகத்தைக் கண்டு பூரிப்பது அவருக்கு வாடிக்கை. அவள் அழகைக் கண்டு ஆனந்திப்பது அவர் வழக்கம். அடிக்கடி அவளை நீலா என்று அழைப்பதே அவருக்குப் பெரிய மகிழ்ச்சி. ஆனால் தாயில்லாக் குழந்தை தன் மகள் என்று நினைக்கும்போது மட்டும் அவருக்குத் துயரம் பெருகி வந்தது.

நீலா இயற்கையாக நல்ல அழகுடையவள். இயற்கையாகவே அவளிடம் சீர்திருத்தக் கொள்கைகளும் தவழ்ந்து விளையாடின. அடிக்கடி அவளுக்குச் சாதி, மதம், சமுதாய சம்பிரதாயங்கள் முதலியவற்றில் சந்தேகங்கள் ஏற்படும். தன் தந்தையிடம் கேட்பாள். திருப்தி இல்லாத பதிலைப் பெற்றுக் சோர்ந்து திரும்புவாள். செல்வச் செருக்கில் வளர்ந்தாலும் நீலா தன் தந்தையின் பண்ணையில் வேலை செய்யும் வேலையாட்களிடம் இரக்கம் காட்டுவாள். அவ் விரக்கத்திற்குரியவர்களில் கந்தனும் ஒருவன். கந்தனிடம் அவளுக்கேற்பட்ட இரக்கம் பிறகு காதலாக மாறியது. அவள் உள்ளத்தில் கந்தன் குடிகொண்டு விட்டான். கந்தன் பரம ஏழை. மருத்துவர் குலத்தவன். அவன் தந்தை குப்புசாமி சிவப்பிரகாச முதலியாரின் வீட்டு வேலையாள். குப்புசாமிக்கு முதலியார் கொடுக்கும் பத்து மரக்கால் நெல்லும், மருத்துவத் தொழில் மூலம் வெளியிலிருந்து வரும் சில்லறை வரும்படியும்தான் வருமானம். குப்புசாமியின் கடைசி பிள்ளையான கந்தன், நல்ல அழகும் உடல் கட்டும் வாய்ந்தவன். முதலியார் உதவியைக் கொண்டு பத்தாவது வகுப்புவரை படித்தவன். பள்ளியில் படிக்கும் போது நீலா அடிக்கடி அவனைக் கண்டு புன்னகை புரிவாள். அதன் அர்த்தம் தெரியாமல் தவிப்பான் கந்தன். ஆவலா? அன்பா? அபிமானமா? காதலா? எது காரணம் அப் புன்னகைக்கு என்பதறியாது திகைத்தான். எஜமானன் மகள் எஜமானியல்லவா என்று தோன்றும். தன்னைத்தானே நொந்து கொள்வான். எந்த முடிவுக்கும் வரமுடியாமல் தத்தளித்தான். ஆனால் அவனால் நீலாவை ஒரு நாளாகிலும் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பள்ளி வாழ்க்கை முடிந்தது. நீலாவை மறக்கவும் முயன்றான். அதில் ஓரளவு வெற்றியும் கண்டான். நீலாவுக்கோ கந்தனின் ஞாபகம் அதிகரித்தது. எப்போது பார்ப்போம் கந்தனை, எப்போது பெறுவோம் அவன் அன்பினை, எப்போது மணப்போம் அச் சுகுமாரனை என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குவாள்.

ஒரு நாள் காலை மணி 8 இருக்கும். முதலியார் தன் பூஜை காரியங்களை முடித்து, சிற்றுண்டி அருந்திவிட்டு, வெற்றிலையும் கையுமாய் திண்ணைக்கு வந்தார். வெளியில் குப்புசாமி நின்றிருந்தான்.

முதலியார்: ஏண்டா குப்பா என்ன இவ்வளவு காலையிலேயே... என்றார்.

குப்புசாமி: சாப்பாட்டிற்கு... என்று இழுத்துப் பேசினான்.

முதலியார்: அடே ராமு, குப்பனுக்கு 2 மரக்கால் நெல் கொடுத்தனுப்பு என்று கூறிவிட்டு வெற்றிலை பாக்குப்போட உட்கார்ந்தார் திண்ணையில்.

குப்புசாமி நெல்லை வாங்கிக் கொண்டு திரும்ப வரும்பொழுது முதலியாரைப்பார்த்து வணங்கினான்,

முதலியார்: ஏண்டா குப்பா உன் மகன் கந்தன் பத்தாவது தான் பாஸ் பண்ணிட்டானே அவனை ஏதாவது ஒரு வேலையில் போடக் கூடாதா?

குப்பு: எங்க எஜமான் தங்கள் தயவால் ஏதாவது... ..வேலை......

முதலி: சரி. இன்று மாலை 4-மணிக்கு அவனை என்னை வந்து பார்க்கச்சொல்லு என்றார். இந்த சம்பாஷணையைக்கேட்டுக் கொண்டிருந்த நீலா திடுதிடு என்று தோட்டத்திற்கு ஓடினாள். பசும் புற்றரையில் சாய்ந்தாள். ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தாள். பிறகு ஒரு கடிதம் எழுதுவதாக முடிவுசெய்து கொண்டு தன் அறைக்கு வந்தாள். கடிதத்தை எழுதிமுடித்தாள். ஒரு தரம் லிகிதத்தை வாசித்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு அது ஒரு காதல் கடிதம் என்று தெரிந்தது. கடிதத்தைப் பத்திரமாக வைத்துக்கொண்டாள். மணியும் 4 அடித்தது. கந்தனின் வரவை எதிர்பார்த்துக்கொண்டுவாயிற்படியில் நின்றுகொண்டிருந்தாள் நீலா. அந்த சமயம் முதலியார் வயலுக்கு சென்றிருந்தது நீலாவுக்கு ஒருநல்ல தருணமாக இருந்தது. கந்தனும் வந்தான். நீலா மிக சிரமப்பட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒன்றும் பேசாமல் கந்தனிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு மறுகணம் உள்ளே சென்றுவிட்டாள். கடிதத்தைப் பெற்றுக் கொண்ட கந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை, கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அதற்குமேல் அவனால் அங்கு நிற்க முடியவில்லை. நேரே காவேரிக் கரைக்குச் சென்றான். தனியாய் ஓரிடத்தில் போய் உட்கார்ந்தான். அவன் மனதில் எண்ணங்கள் பல எழுந்தன. ஒரு பக்கம் மகிழ்ச்சி, ஒரு பக்கம் துக்கம். இரவு எட்டு மணிக்கு வீடு சென்றான். இவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த குப்புசாமி கந்தனைக்கண்டதும் "என்னடா தம்பி! ஐயா; என்ன சொன்னாங்க." என்று கேட்டான். அப்பொழுது தான் கந்தனுக்கு தான் முதலியாரைப் பார்க்காமல் வந்தது ஞாபகம் வந்தது. விழித்தான். "நான் அங்குப்போகவில்லை" என்று சொல்ல அவன் குரல் தழுதழுத்தது. குப்புசாமி கோபம் கொண்டான். ஒருநாளும் தன் மகனைக் கடிமை

யாக வைதறியாத குப்புசாமி அன்று ஆத்திரம் தீரத்திட்டினான். கந்தசாமி குற்றத்தை உணர்ந்து நெஞ்சம் குமுறினான். "படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பதால்தானே நம் தந்தை திட்டினார்! எங்காவது சென்று வேலையில் அமர்ந்து பிறகு இங்கு வருவோம்" என்று முடிவுசெய்துகொண்டான் அன்றிரவே சென்னைக்குக்கிளம்பிவிட்டான். கந்தன் போகாத இடம் கிடையாது. எங்குச் சென்றாலும் அவன் கண்களுக்கு "நோ வேக்கன்சி—வேலை இல்லை" என்ற அட்டைகளே தென்பட்டன. சென்னை அவனுக்குப் புதிது. வந்து ஒரு திங்கள் ஆகிவிட்டது. கையிலிருந்த பணமும் கரைந்துகொண்டே வந்தது. வந்த வேலையும் தீர்ந்தபாடில்லை. ஆனாலும் இன்னும் அவனுக்கு வேலை கிடைக்கும் என்ற ஆசை மட்டும் விட்டபாடில்லை. ஒருநாள் ஒரு தினசரி பத்திரிகையில் ஒரு விளம்பரத்தைக் கண்டான். உடனே ஒரு மனு தயார் செய்துக்கொண்டு கிளம்பினான். உள்ளே நுழைந்தான். முதலாளி இல்லை என்ற செய்தியைக் கேட்டான். ஆனால் தலைமை குமஸ்தா தணிகாசல ஐயர் இருந்தார். அவரிடம் சென்று மனுபாரத்தை கொடுத்தான். மனுவைப் பார்த்துவிட்டு உங்களுக்குச்சொந்த ஊர் இருப்பூரா? என்று அவர் கேட்டார்.

"ஆமாம்."

"நீங்க என்ன காஸ்ட்?"

"அதை ஏன் கேட்கிறீங்கோ"

"இல்லை முதலாளி இருக்கார் பாருங்கோ அவர் வைணவா; பல காரியங்களுக்கு...வசதி!" "அப்பொழுது எனக்கு இங்கே வேலை கிடைக்காது. நான் போகிறேன்." என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான் கந்தன்.

இந்நிலையில் அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சட்டென்று ஒரு ஞாபகம் வந்தது. தன் பசாந்த தொழிலில் கொஞ்சம் பயிற்சி இருந்ததைப்பற்றிக் களிப்பெய்தினான். மடமடவென நடந்து சென்று பாரிஸ் கார்னரில் உள்ள ஒரு பேரீஸ் ஹேர் கட்டிங் சலூனில் வேலையிலும் அமர்ந்துவிட்டான்! நீலாவின் அந்த அழகிய காதல் கடிதத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது அவனுடைய ஓய்வுநேர வேலையாக இருந்தது!

வயதான கும்புசாமிக்கு கந்தனின் பிரிவு மட்டற்ற துக்கத்தை உண்டாக்கியது. மறைந்திருந்த காசநோய் வளர ஆரம்பித்தது. கந்தா! கந்தா!! என்ற சொற்களைத் தவிர வேறு சொற்கள் ஏதும் அவன் வாயினின்று வருவதாயில்லை. அவன் நிலை பரிதாபகரமாய் இருந்தது. ஆனால் அதைவிட பரிதாபகரமாய் இருந்தது நீலாவின் நிலை! "அவர் ஊரைவிட்டே ஓடிவிடும்படி நான் என்ன குற்றம் செய்தேன்? கடிதம் எழுதினது தவறு? அல்லது யாருக்காகிலும் தெரிந்திருக்குமா? உண்மைக் காதலின் உயர்வை அறியாத மூடர்களுக்கு இச்சேதி தெரிந்தால் காமவெறி பிடித்தலையும் காதகி, மானங்கெட்டவள் என்றெல்லாம் என்னைத் தூற்றுவார்களோ என்றெல்லாம் அவள் மனதில் எண்ணற்ற சிந்தனை அலைகள் எழும்பி மோதின.

பதிலளிக்காது சென்ற கந்தன் செயல் அவளை மௌனியாக்கிவிட்டது. நீலா மௌனியாக இருப்பதன் காரணம் முதலியாருக்கு விளங்கவில்லை. எது கேட்டாலும் மௌனம் அல்லது ஒன்றும் இல்லை என்ற பதில். என்ன செய்வார் முதலியார் பாவம்! காரணம் தெரிந்தால்தானே பரிகாரம் தேடுவார்! மாயம், மந்திரம், மை முதலிய பயனில்லா காரியங்கள் பற்பலசெய்து பார்த்தார். பயனில்லை! கடைசியாக சென்னையிலிருக்கும் தன் தங்கையின் வீட்டிற்கு நீலாவைச் சில நாட்கள் அனுப்பிவைப்பதாக முடிவுசெய்தார். தற்செயலாக எங்காவது கந்தனைச் சந்திக்க முடியுமானால் தன் குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்கலாம் என்ற எண்ணத்துடன் சென்னைப் பிரயாணத்திற்கு நீலாவும் ஒப்புக்கொண்டாள்.

* * *

வழக்கம்போல் வேலை விட்டு வீடு சேர்ந்த கந்தன் வாயிற்படியில் ஏறினதும் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். ஆச்சரியத்தால் அவன் உள்ளத்தில் எழுந்த எண்ணங்கள் அவனை ஹாலுக்குள் தள்ளிற்று. ஹாலின் சன்னல் வழியே தன் பார்வையைச் செலுத்தினான். ஆம் அந்த உருவம் தான்! தன் மனம் எனும் ஏட்டில் அழியாதகாதல் சித்திரத்தை தீட்டிவிட்ட நீலாதான்! அந்த செந்தமிழின் இன்பம்தான் அந்த முழுநிலவு முகத்தாள்தான்! அவளைக் கண்டதும் நீலா என்ற சொற்கள் அவன் வாயினின்று அவனை யறியாமலே வந்து விட்டன. "யார்? அது" என்ற சப்தம் உள்ளிருந்து வந்ததும்தான் கந்தனுக்கு சுய உணர்வு வந்தது. விடுவிடு வென்று மறுபடியும் கீழே இறங்கி வந்தான். நீலாவின் பார்வைகந்தன்மேல் விழுந்தது. "தாங்களா" என்று கேட்ட அவள் குரலில் ஆச்சரியம், மகிழ்ச்சி, துக்கம் மூன்றும் கலந்து தொனித்தன.

"நீலா, கீழ் வீட்டில் குடியிருப்பவர்கள் உனக்குச் சொந்தமா?"

"ஆமாம். அதிருக்கட்டும். முதலில் தாங்கள் என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள்."

"எதற்காக?'

"நான் செய்த தவறுக்காக"

"நீ என் வரையில் எந்த தவறும் செய்ததாகத் தெரியவில்லையே"

"தாங்கள் ஊரைவிட்டு இங்கு வந்த காரணம்"

"என் தந்தை என்னை வெறுத்தார். அதனால் எனக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை."

"ஏன் வெறுத்தார்?"

"அது எனக்கே தெரியவில்லை"

"என் கடிதம் தங்கள் மனதை நோகவைத்து விட்டதா?"

"இல்லை, இல்லை. நான்தான் பதிலளிக்காமல் வந்துவிட்டோமே என்று வருந்துகிறேன்."

"அப்பொழுது......?"

"இன்னும் சற்று நேரத்தில் பதில் தருகிறேன்" இருவரும் விடைபெற்றுக் கொண்டார்கள். சிறிதுநேரத்திற்குப்பிறகு கந்தனிடமிருந்து கடிதம் ஒன்று கிடைத்தது நீலாவுக்கு! இரவு மணி பத்து அடித்தது. எல்லாரும் நித்திரையில் ஆழ்ந்தார்கள். நீலா, தன் அறையில், விளக்கை சற்றே தூண்டிவிட்டு, படுத்துக் கொண்டே, கந்தன் கொடுத்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

அன்புள்ள நீலாவுக்கு,

நீ என்னைக் காதலிப்பது பிறருக்குத்தெரிந்தால் பாதகமில்லை என்ற அளவிலில்லை. காரணம் நீ உயர் குலப் பெண், செல்வந்தரின் மகள். நான் ஒரு "இழிகுலத்தோன்." உன் காதலை நான் மறுத்தால் உன் உள்ளம்துடிக்கும். எதையும் பொருட்படுத்தாமல் நாம் இருவரும் சேர்ந்து வாழலாம். ஆனால் சமுதாயம் அதைப் பொறுக்காது. உன் வைதீகத் தந்தை உள்ளமும் சும்மா இராது. கடவுளாவது கிருபை அளிக்குமா? அதுவும் சந்தேகப்

தான். கிருபை அளித்ததாகக் கதைகள் பல உண்டு. ஆனால் செயலில் கிடையாது. இவ்வளவு எதிர்புகளுக்கிடையே நாம் வாழ்ந்து என்ன சுகத்தை அனுபவிக்கமுடியும்? அடுத்தடுத்து" இன்னல்கள் விளைவிப்பார்கள். அநியாயமாய் நம்மைத்தூற்றுவார்கள். ஓடித்திரியும் நாய்களுக்குத் தரப்படும்மதிப்பைக்கூடநமக்குத்தராது இந்த செல்லரித்துப் போயிருக்கும் சமுதாயம். உண்மைக்காதல்தான் நம்மிடையே உலவுகின்றது. நாம் ஒன்று பட ஒருவழிதான் உண்டு. உன் தந்தையின் சம்மதத்தை நீ எப்படியாவது பெற்றுவிட்டால் நாட்டில் விதிவிலக்கான தம்பதிகளாகவாவது நாம்வாழலாம். இன்றேல், ஏகாந்தமாய் ஓர் இரவைக் கழிப்போம். என்றுமில்லா இன்பம் பெறுவோம். அந்த இரவையே நம் வாழ்நாள் என்று கருதுவோம், இரவின் இறுதியோடு நம் வாழ்நாள் இறுதியையும் முடித்துக் கொள்ளுவோம். இதுதான் என் முடிவு.

உடன் பதில் —கந்தன்

இதைப் படித்து முடித்ததும் அவள் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது. கடிதத்தை சாம்பலாக்கிவிட்டு தூங்கிவிட்டாள் மறுநாட் காலை முதலியார் ஊருக்குக் கிளம்பினர்.

"என்னம்மாஉனக்காகத்தானே நான் இங்கு வந்தேன். நீ இங்கேயே இரு. இன்னும் சில தினங்களில் வந்து அழைத்துக் கொண்டு போகிறேன்." என்று நீலாவின் தந்தை, எவ்வளவு சொல்லியும் அவள் கேட்கவில்லை. பிடிவாதமாக ஊருக்குக் கிளம்பி விட்டாள். சென்னை வந்தது வியர்த்தம் என்று எண்ணி கொண்டார் முதலியார். ஊருக்கு வந்ததும் மெதுவாக தன் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் காதல் மாணிக்கத்தைத் தந்தைக்கு எடுத்துக் காட்டினள். முதலியாருக்கு நீலா இதுவரை மௌனியாக இருந்ததன் காரணம் ஒரே விநாடியில் விளங்கி விட்டது. முதலியாரின் கோபம் கட்டுக்கடங்காது காட்டாற்று வெள்ளம் என உருவெடுத்தது. அவர் இளகிய மனம் இரும்பாயிற்று. வாயில் வந்தவாறு நீலாவைத் திட்டினர். அவர் நீலாவின் மேல் வைத்திருந்த அன்பு பூராவும் வெறுப்பாக மாறியது. நீலா வேறு வழியில்லாமல், கந்தனுக்கு, தான், அவன் குறிப்பிட்ட இன்ப இரவை, கடைசி இரவை, ஏகாந்த இரவை எதிர்பார்ப்பதாகக் கடிதம் எழுதி விட்டாள். தந்தைக்காக கீழ் கண்ட கடிதத்தையும் எழுதி வைத்துக் கொண்டாள்.

"அன்புள்ள தந்தைக்கு ஆசை நீலா வணக்கம்.

நான் தங்களை விட்டுப் பிரிகின்றேன். திரும்பிப்பார்க்கும் நோக்கத்துடன் அல்ல. இனி என்னை நீங்கள் எப்பொழுதுமே பார்க்க முடியாது-அத்தகைய இடத்திற்குப் போகின்றேன். அப்படிப் பார்க்க நேர்ந்தாலும் மூடிய கண்ணுடனும் மூச்சிழந்த நிலையிலும்தான் காண முடியும். வெறும் பிணமாகத்தான் பார்க்க முடியும். நான் பிரிவதின் காரணம் தங்களைப் போன்று, உண்மைக் காதலின் உயர்வை வதைக்கும் பாழும் கொள்கையைக் கடைப் பிடிப்பவர்க்கெல்லாம் இது ஒரு படிப்பினையாக இருக்க வேண்டுமென்பது தான். நான் தங்களைக் கடைசியாக வேண்டிக்கொள்வது ஒன்றுண்டு. அது இது. இனியாவது என்னைப் போன்ற கிராமப் பெண்கள் இப்படி உயிரிழக்க நேரிடாமலிருக்கத் தொண்டு செய்யுங்கள்.

இப்படிக்கு

தங்கள் அன்பை மறவா நீலா.

அன்று பௌர்ணமி. முழு நிலா காய்கிறது. வெளியே சென்ற முதலியார் இன்னும் வீடுதிரும்பவில்லை. வாயிற்படியில் உட்கார்ந்து கொண்டு கடிதம் எழுதி இரண்டு நாளாகியும் இன்னும் ஏன் விடை வரவில்லை என்று ஏங்கிக் கொண்டிருந்தாள் நீலா. அப்பொழுது அவள் எதிரில் முக்காடிட்ட ஒரு உருவம் தோன்றியது. நீலா திடுக்கிட்டாள்.

"பயப்படாதே நீலா, நான்தான் கந்தன் நாம் பள்ளிக்குப் போகிற வழியில் ஒரு பெரிய அரசமரம் இருக்கிறதே, அதனடியில் இருக்கிறேன். எல்லோரும் தூங்கின பிறகு பத்திரமாக வந்து சேர்ந்து விடு" என்று சொல்லிவிட்டு முக்காட்டில் வந்த கந்தன் சென்று விட்டான். சாப்பிட்டு முடிந்த பிறகு நீலா, தூங்கச் செல்வதுபோல் படுக்கையில் போய்ப்படுத்துக் கொண்டாள். மணி பதினொன்று அடித்தது. தந்தை குறட்டைவிடும் சப்தம் வந்தது. நீலா மெள்ள எழுந்து வெளியே வந்தாள். தந்தைக்காக எழுதி வைத்திருந்த கடிதத்தை வாயிற் படியில் போட்டுவிட்டு விரைந்தாள் காவேரிக்கரையோரமாக, அரச மரத்தை நோக்கி காவேரிக் கரையிலே கொஞ்ச தூரம் சென்றதும், யாரது என்று, யாரோ தொலைவில் கூப்பிடும் குரல் கேட்டு நடுங்கினள். பேசாமல் வேகமாக நடந்தாள். மறுபடியும் யாரது என்று குரல்ஒலி கேட்கவே திரும்பிப்பார்த்தாள். சற்று தூரத்தில் யாரோ தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டாள். வருபவன் கந்தனல்லன் என்று தெரிந்து உள்ளம் பதறினள். சட்டென்று காவேரிக் கரையின் ஓரமாக அடர்ந்துள்ள மரங்களின் நடுவே புகுந்து மறைந்து கொண்டாள். "யாரது" என்று கேட்டுக் கொண்டே வந்தவன் தலையாரி மாணிக்கம். இரவு பதினொரு மணிக்கு வெள்ளைப் புடவையுடன் முக்காடிட்டுக் கொண்டு காவேரிக் கரை யோரமாக வேகமாக நடந்து வந்த நீலாவைக் கண்டு திருடனோ என்று தலையாரி மாணிக்கம் சந்தேகித்ததில் ஆச்சரியமில்லை. நீலா மரங்களிடையே புகுந்து மறைந்தது அவன் சந்தேகத்தை உறுதிப்படுத்திற்று. உடனேமாணிக்கம், "ஏ! முனியா, ஏ! கந்தா ஓடி வாங்கள் எல்லாம்" என்று சப்தம் போட்டுவிட்டு துணியை வரிந்து கட்டிக் கொண்டு தடியுடன் புகுந்தான் மரங்களிடையே! நீலாவுக்கு வியர்த்தது. நிற்கவும் செயலற்ற பயத்தாலும், அளவு கடந்த துக்கத்தாலும் மயக்கம் உற்றுக் கீழே விழுந்தாள். அவள் விழுந்த சரிவான அந்த இடம் அவளைக் காவேரியிடம், ஒப்படைத்தது. காவேரி நீலாவை அணைத்துக் கொண்டாள். பாழும் சமுதாயம் நீலாவை அணைத்துக் கொள்ள மறுத்தது. ஆனால் காவேரி அவளை அன்புடன் சேர்த்துக் கொண்டு ஆதரவு கொடுத்து மகிழ்ந்தது. காவேரிக்குத்தான் நீலாவிடம் எவ்வளவு அன்பு!

* * *

அரசமரத்தடியில் நின்று கொண்டு அன்பு நீலாவின் வரவை வழிமேல் விழிவைத்து ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தான் கந்தன். நீலா வரவில்லை. ஒருவேளை தன் கடிதம் நீலாவின் தந்தையிடம் சிக்கிற்றோ என்று எண்ணிப் பயந்தான். நீலாவை வீட்டில் சிறையிட்டு வைத்துக் கடுங்

காவல் தந்துவிட்டனரோ என்று நினைத்து வருந்தினன். அப்படி இருக்குமானல் நான் என்ன செய்வது என்றெண்ணித் திகைத்தான். ஆனல் இந்த அச்சம், வருத்தம், திகைப்பு மூன்று உணர்ச்சிகளையும் வி...டியடித்த வண்ணம் அவன் காதில் வந்து விழுந்தது வெகு தூரத்திலிருந்து மாணிக்கம போட்ட ஒலி. அந்த ஒலியைக் கேட்டதும், நீலா அகப்பட்டுக்கொண்டாள் நாசகார சமூகத்திடம், இனி அவள் தப்பமுடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டான் கந்தன். வேகமாக ஓடினன் காவிரியை நோக்கி.

"நீலா! நாம் ஏகாந்த இரவை இழந்துவிட்டோம், நீ சமூகம் எனும் புலியிடம் சிக்கிவிட்டாய். இனி நீ தப்பமுடியாது. உன் உள்ளம் இதுபோது எவ்வளவு வேதனை அடையும் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். என்ன செய்யலாம் நீலா, மக்களின் மடமை முற்றிலும் ஒழியும்வரை, 'காதல்' தோணி, இப்படித்தான் சமுதாயப் பாறையில் மோதுண்டு சுக்கு நூருகிவிடும். நான் வருகிறேன்—வருந்தாதே" என்று கூவினன். நீலா நீலா என்று ஆயிரம் முறை வாய் விட்டுக் கதறினன். கீழே குனிந்து பார்த்தான். பெரிய மடுவு. அதிலே சுழன்று வீசும் பெரிய நீர்ச் சுழல்கள். பளிங்குபோன்ற தண்ணீர்! நீலா நான் வரட்டுமா என்று மெல்லக் கூறினன். அடுத்த கணம் உள்ளே, நீரில் மிதந்தான். காவிரி அவனையும்தான் அணைத்துக் கொண்டது. நீலாவை அணைத்துக் கொண்ட காவிரி கந்தனை மட்டும் புறக்கணித்துவிடுமா என்ன?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பகிருங்குது. என் தம்பிகள் இருக்குன்கள்லே, அவன்கள்ளே எவன் அந்தக் கழுதை சுகுணவைக் கல்யாணம் பண்ணிக்கிருனே அவனுக்கு இந்த வீட்டைக் குடுத்துட்டு கம்ம ரெண்டு பேத்தையும் விரட்டசதி செய்ரு எங்காயி. ஒருத்தன் இப்பவே அந்தத் தென்னண்டைப் பக்கத்தைப் பிரிக்கச் சொல்லிப் பாடாபடுத்துருன், இன்னெருபோக்கிரிப் பய நான் வெளியே போரப்போ கல்லை வீசருன்,

சுந்: அதைப் பத்தி நீங்க கவலைப் படாதிங்க நாதா. அந்தப் பயல்கள்ளாம் பெரியவன் களாணுப். பாத்துக்கலாம். இப்பவே அதைப் பத்தி நெனச்சு மனதைத் தொந்தரவு பண்ணிக்காதிங்க, ஒடம்பு இளைச்சுப் போகும்.

சுகு: அதுவுஞ் சரிதான் சுந்தரி! இன்பமயமான நேரத்திலே அந்தத் துன்பத்தை நினைச்சு ஏன் வருந்தோணும். சரிமறந்துட்டியே என் இதழ் ஊறலைத் தாங்கமுடியலே சட்டுனு ஒன்று... (சுந்தரி அவன் அருகே சென்று தழுவி முத்தமிடுகிருள்)

சுகு: அடடா, கதவைச் சாத்தலியே! அந்தச்சனியன் பாத்துடப் போவுது பொறுக்காது, நம்பளை இப்படிப் பாத்துருச்சுன. கதவைத் தாளிடு, விளக்கை அணை. கண்ணைக் குத்தறது அதோட வெளிச்சம்.

கதவுத்தாள் சப்தம் ... தொடர்ந்து அறைக்குள் விளக்கொளி மங்குகிறது. இருள் கவ்வுகிறது.

(திரை விழுகிறது)

ஏஜெண்டுகள் தேவை!

கீழ்க்கண்ட இடங்களில் போர்வாள் விற்பனை செய்ய பிரதிக்கு அணு 12 முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

மேட்டூர், வெளிப்பாளையம், போளூர், அறந்தாங்கி, பண்ருட்டி, வாடிப்பட்டி, இஞ்சிகுடி, ஜோலார் பேட்டை, திருவள்ளூர், திருவத்திபுரம், சிவகங்கை, பட்டுக்கோட்டை, வந்தவாசி, தஞ்சாவூர், திருக்காட்டுப்பள்ளி, துறையூர், புவனகிரி, கொழும்பு, சென்னிமலை.

இந்திய மொழிப் பிரச்னை

ஆசிரியர் :
பன்மொழிப் புலவர்
க. அப்பாதுரை
M. A. L. T

[INDIA'S LANGUAGE PROBLEM]

சிக்கலான இந்திய மொழிப் பிரச்சினையை நன்கு அலசி ஆராய்ந்துள்ள அரிய ஆங்கில நூல்—தமிழே இந்தியாவின் பொது மொழியாதற்குரியது என்பதைத் தெளிவாக விளக்குவது. பேராசிரியர் மறைமலை அடிகளாரின் 40 பக்க முன்னுரையுடன் கூடியது.

வணிகர்க்குக் கழிவு உண்டு

218 பக்கங்கள் விலை ரூ 2 8 0

வெளியிடுவோரும் விற்பனையாளரும்

தமிழ் இந்தியா பதிப்பகம்

13. அருணசல ஆசாரி தெரு :: சென்னை 5

கீழ்க்கண்ட இடத்திலும் புத்தகம் கிடைக்கும்

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு, சென்னை

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelivan B. A. (Ho